எழுத்து

இலக்கிய விமர்சன மாத ஏடு

பத்தாம் ஆண்டு

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

மெல்ல தமிழ் இனி சாகுமா?
தலையங்கம்

மரபும் விமர்சனமும்
மு. பழனிசாமி

ஆகாசப்பேணி—ஒரு கதை
ஹரி. சீனிவாசன்

தொற்றுநோய்
பூ. மாணிக்கவாசகம்

தமிழ் எழுத்தாளர் மொழி மகாநாடு
சு. சங்கரசுப்ரமண்யன்

அறிஞர் ஆந்தை
வல்லிக்கண்ணன்

நினைவும் கனவும்
ந. சிதம்பரசுப்ரமண்யன்

ஜனவரி-1968

109

50 பைசா

எழுத்து

பத்தாம் ஆண்டு

ஏடு 109

ஆசிரியர் : சி. சு. செல்லப்பா

ஜனவரி 1968

இங்கிலீஷ் மாதம் தோறும் முதல் தேதியன்று வெளிவரும்.

ஆசிரிய காரியாலயம் : எழுத்து, 19-A, பிள்ளையார் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

சந்தா விகிதம் ; தனிப்பிரதி 50 பைசா. ஒரு ஆண்டு ரூ. 6/- வெளிநாடு : ஆண்டுக்கு ரூ 8/-

இலக்கிய, கலைக் கட்டுரைகளை வெளியிடும் : கட்டுரைகளுடன் ஸ்டாம்பு ஒட்டிய, தன் விலாசமிட்ட கவர்கள் அனுப்பப்பட வேண்டும். சுருக்கமாக எழுதப்பட்ட கடிதங்கள், கருத்துக்கள், எழுத்து அரங்கம் பகுதியில் வெளியிடப்படும்.

கடிதப் போக்குவரத்து, கட்டுரை அனுப்புதல் : மேலே கண்ட முகவரிக்கு ஆசிரியர், மானேஜர் என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

தலையங்கம்

மெல்ல தமிழ் இனி சாகுமா ?

'மெல்லத்தமிழ் இனிச்சாகும் என்றந்த பேதை உரைத்தான்' என்றான் பாரதி. அன்று அப்படி சொன்னவன் பேதையாக இருக்கலாம். இன்று அப்படி ஒருவன் சொல்ல முன்வந்தால் அவனை பேதை என்று சொல்வதா விவேகி என்று சொல்வதா? தமிழ்மொழி படுகிறபாடு அப்படி இருக்கிறது. இன்று. தமிழை வளர்க்க விரும்புகிறவர்கள், தமிழ்மொழியை காக்க போராடுபவர்கள், தமிழ் இலக்கியம் உலகமொழி இலக்கியத்திலேயே தலை சிறந்தது என்று பெருமைப்படுகிறவர்கள், இன்று அதிகம்சொல்கிறதை கொஞ்சம் செய்கிறதை பார்த்தால்தமிழ் மொழி என்ன, தமிழ் இலக்கியமேதேங்கிவிடும்- என்பதில் சந்தேகமே இல்லை. முதலில் பிற மொழிச் சொற்களை, குறிப்பாக சமஸ்கிருதம் கேட்டாலே கசப்பு. அடுத்தபடி ஜ. ஸ. ஷ. க்ஷ ஹ. எழுத்துக்களை பார்த்தாலும் உச்சரித்தாலும் வெறுப்பு. (டிரங்க் கால்' என்பதுக்கு 'முண்டக் கூவல்' என்ற மொழிபெயர்ப்பும் 'ஹேஸ்டிங்ஸ்' என்பதை 'ஏசுடிங்குசு' என்று எழுதுவதும் உதாரணங்கள்) இதுகளுக்கு மேலாக தூய தமிழில் படைப்பாளிகள் நடை எழுத வேண்டும் என்பது.

உலக மக்களின் சிந்தனை வளத்தின் விளைவாக ஆராய்ச்சியும் கண்டுபிடிப்பும் இன்று வளர்கிற வேகத்தையும் பெறுகிற மதிப்பையும் பார்க்கும்போது, ஒருசொல் வாயிலிருந்துவெளி வந்த அதே காலத்தில் உலகமே அதன் பொருளை வாங்கிக் கொண்டுவிட முடிகிறபோது அந்த சொல்லுக்கு சங்க காலத்து சொல் ஒன்றையோ அல்லது அதன் இமிடேஷனை ஒரு சொல்லையோ வலிந்து திணித்துஅந்தசொல்லை அறிமுகப்படுத்தி அந்த சொல்லுக்கிசைய மூல மொழிச் சொல்லின் பொருளை விளக்க அந்த விளக்கமும் அதைப்போலவே உள்ள பல சொற்களால் ஆனதாக இருந்து விட்டால் போதும் வேறு வினையே வேண்டியதில்லை. நாம் பொருளை வாங்கிக் கொள்கிறதுக்குள் அடுத்த ஆராய்ச்சியும் கண்டுபிடிப்பும் கூட நம்மைத் தாண்டிப்போய்விடும்!

இப்படி சொற்கள் சம்பந்தமாக காட்டப் படும் அசட்டுத்தனம் எழுத்து விஷயத்திலும் இருக்கிற பைத்தியக்காரத்தனத்தை என்ன வென்று சொல்வது? ஜ, ஸ ஷ, க்ஷ ஹ எழுத்துக்களிடம் வெறுப்பு அவை சம்ஸ்கிருதமாக இருப்பதாக கருதி. இந்த ஐந்து எழுத்துக்களும் சம்ஸ்கிருத எழுத்துக்கள் இல்லை. சம்ஸ்கிருத மொழி ஒலி கொண்டவை. பார்க்கப் போனால் இந்த ஒலி சம்ஸ்கிருதத்துக்கு மட்டும் சொந்தம் இல்லை. எந்த மொழிக்கும் உண்டு. எழுத்தை வெறுப்பதையாவது அனுமதித்து விடுவோம். ஒலியை வெறுக்கிற புத்திசாலித் தனம்! இந்த ஐந்து எழுத்துக்கள் பிடிக்க வில்லை என்றால், இன்னவைதான் தமிழ் எழுத்துக்கள் என்று இவர்கள் கருதும் எழுத்துக்கள் சிலதில் இந்த ஒலி ஏறும்படியாக புள்ளி, கோடு, ஏதாவது சேர்த்து அடையாளம் குறிக்கும்படியாக செய்து கொள்ளலாமே. அதை விட்டு பெயரையே உரு மாற்றும் காரியம் விவேகமான காரியமா? தமிழ்மூலம் சரித்திரம்படித்த மாணவன் ஒருவன் வெளி நாட்டாரிடம் ஏசுடிங்குசு என்று சொன்னால் சிரிக்கமாட்டான்? வெள்ளைக்காரர்கள்'டின்னவேலி','டூடிகோரின்' 'டாஞ்சூர்' என்று அன்று செய்ததுக்கு பழியா இன்று இது ?

அப்புறம் இராசாசி, இரப்பர், இராமலிங்கம் இப்படி இ முதலில்வர வேண்டுமாம். கூப்பிடும்போது இப்படியே கூப்பிடுவதானால் பேஷாக எழுதட்டும். அதை யாரும் செய்வதில்லையே. செயராமன், சகந்நாதன் வேறு. எழுதுவதுக்காக ஒரு பெயரா? இந்த விதமாக இன்று வளர்கிற மண்பாங்கைப் பார்த்தால் தமிழ் எங்கே போகிறது என்ற கேள்வியை கேட்டுக்கொள்ளத் தோன்றுகிறது.

இவைகளுக்கு சிகரம் வைத்த மாதிரி ஆட்டைக் கடித்து மாட்டைக்கடித்த கதையாக, படைப்பாளிகள் நல்ல தமிழில் எழுதவேண்டும் என்பது. இன்று தமிழக கல்வித் துறையில் தமிழ் பேராசிரியர்களாக புலவர்களாகப் பதவி வகிப்பவர்கள் படைப்பாளிகளுக்கு உபதேசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். முந்தின

(15-ம் பக்கம் பார்க்க)

மரபும் - விமர்சனமும்

எம். பழனிசாமி

இன்றைய இலக்கிய உலகிலே 'மரபு' என்ற சொல் அடிக்கடி கையாளப்படுவதைக் காண்கிறோம் 'இது மரபுபடி அமையவில்லை'. என்றோ, 'இது மரபுக்கு ஒத்து வந்துள்ளது' என்றோ கூறுவதையும் பார்க்கிறோம். இன்னொரு புறம் மரபுக்கேற்றபடி எழுத வேண்டும். மரபை மீறலாகாது' என்ற கட்டளைக் குரலையும் செவிமடுக்கிறோம். இந்த மரபு என்ற சொல் உரைநடை நூல்களைவிட கவிதைத் துறையில் மிக அதிகமாக (?) உபயோகப்படுத்தப்படுவதையும் காண்கிறோம். இப்படி இதை உபயோகிப்பவர்கள் 'மரபு' என்று இன்றைய இலக்கியத்தில் பேசும் பொழுது அதற்கு உண்மையிலேயே உள்ள பொருள் என்ன என்பதை விமர்சகன் அறிந்திருக்க வேண்டும்.

முதலில் 'மரபு' என்ற சொல்லுக்குப் பொருள் காணலாம். 'மரபு' என்பதைக் கட்டுக்பாடு என்ற தோராயமாகக் குறிப்பதாகப் கொள்ளலாம். ஆனால் கட்டுப்பாடு என்பது நீக்க முடியாததாக — வரையறைக்குட்பட்டு செயல்படும் ஒன்ருக—நிற்கிறது. மரபு அப்படியில்லை! காலத்தில் அது மாறுபட்டு வந்துள்ளது. எனவே மரபு என்பது மாறக்கூடிய இயல்புடையதாகிறது.

பண்டைக் காலத்தில் பெரியோர்கள் தம் வாழ்வில் பலவற்றிற்கு பல பெயர்களைச் சுட்டினர்; பொருள்களைப் பல பெயர்களால் பெயரிட்டுக் குறித்தனர் இப் பெயர்கள் யாவும் சொற்களாக அமைந்தன என்பது அறிந்த விஷயமே. இந்தச் சொற்களில் பலவற்றிற்கு அவை சுட்டிய பொருளுக்கும் பெயருக்கும் பொருத்தமில்லாமலே இருந்தன என்பதையும், இலக்கணவாசிரியர்கள் கூறுவர். ஒரு மொழியில், ஒரு சொல்லுக்கும் அது சுட்டிய பொருளுக்கும் ஏதாவது தொடர்பு இருப்பினும் அதே சொல் வேறு மொழிக்காரனுக்கு அதே பொருளை தோற்றுவிக்கும் என்று கூற முடியாது. எனவே, ஒரு பொருளுக்கு இதுதான் பெயர் என்று குறிப்பதில் அர்த்தமில்லாமல் போய்விடும் ஆயினும், உலக வழக்கப்படி சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பு ஒத்துக் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இப்படி ஏற்றுக் கொண்ட ஒன்று அதன் காலத்தில் மக்களிடையே பரவி மற்றையோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அவர்கள் அவர்கள் அத்தொடர்பை அறிந்தோ அறியாமலோ ஏற்றுக் கொண்டனர். காலம் செல்லச் அது . அவர்களது பின் சந்ததியாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. சிறுகச் சிறுக சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பு-அப்படி இருந்திருப்பின் மறக்கப்பட்டிருத்தல் வேண்டும். இதுவே நீண்ட நெடுங்காலத்திற்குப் பின்-காரண காரியம் ஆராய முடியாத போது—மரபு என்ற பெயர் பெற்றது. "பெரியோர் எவ்வழிச் செப்பினர், அவ்வழிச் செப்புதல் மரபு" என்று கூறப்படுவதும் இங்கு நோக்கத்தக்கது.

',மரபு என்பது முக்கியமாக பிடிவாதமாக நாம் கொண்டிருக்கும் நம்பிக்கைகளைப் பாதுகாப்பது ஆகாது. இந்த நம்பிக்கைகள் காலப் போக்கில் இன்றுள்ள வாழும் தன்மையை அடைந்துள்ளவை. மரபு என்பதில் வழக்கமான செயல்கள், பழக்கங்கள், முக்கியமான மதச்சடங்கு முதல் வழியில் எதிர்படும ஒரு முக்கியமாள புதியவருக்கு வணக்கம் சொல்லில் நாம் கையாளும் முறை ஆகியவை வரையுள்ள செயல்களும், இன்னும் இதுபோன்று உள்ள நடைமுறை வழக்கங்கள் ஆகியவைகளும் அடங்கும். என்று கொல்லத்தக்கன பலவும் இதில் அடங்கும். என்பதாக டி. எஸ். எலியட் கூறினர்.

இப்படி வரையறுக்கப்பட்ட மரபு உலகத்திற்கே பொதுவான ஒன்று என்றால், இல்லை. இது நாட்டுக்கு நாடு இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. மனிதனின் அடிப்படைத் தேவைகள் ஒன்றெனினும் - ஒத்திருக்கின்றன எனினும்-அவற்றையடைய மனிதன் கைக்கொள்ளும் முறைகள், வழிகள், நாட்டுக்கு நாடு வேறுபட்டிருக்கின்றன. இவைகளின் வழியே தோன்றிய மரபும் நாட்டுக்கு நாடு, மொழிக்கு மொழி மாறுபட்டே இருக்கும்.

இடந்தோறும் - நாடுகள் தோறும் - மாறுபட்டுள்ள இந்த மரபு, நம் தமிழ் நாட்டில் எவ்வாறு இருந்தது என்பதை விமர்சகன் சிறிதாவது தெரிந்து கொள்வது நலம் பயக்கும் தமிழ் மரபைப் பற்றி பேசும்பொழுது முதலாவது பொருள், நிலமாக உள்ளது நிலத்தைச் சார்ந்தே யாவும் நடப்பதால் இதையே முதற் பொருளாகக் (முதல்) கொண்டனர் இதுவும் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டு, இந்த நான்கினுள்ளும் அடங்காத பாலையை ஐந்தாவதாக வைத்தனர். இந்த நிலவகைக்கேற்ற வாழ்க்கை

முறையை அமைத்தனர். நிலத்திற்கேற்ற உயிரினங்களைப் படைத்தனர். அந்தந்த நிலத்தில் கூறப்பட வேண்டிய செய்திகள் யாவை என்று பாகுபடுத்தி வைத்தனர்.

நிலத்தோடு சேர்ந்து 'பொழுது' என்ற ஒன்றும் முதற்பொருளாகக் கருதப்படும். அதுவும் பெரும் பொழுது, சிறுபொழுது என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டு பேசப்படும்.

	பெரும் பொழுது	சிறுபொழுது
குறிஞ்சி	கூதிர், முன்பனி	யாமம்
பாலை	வேனில், பின்பனி	நண்பகல்
முல்லை	கார்	மாலை
மருதம்	12 மாதங்களும்	விடியல் வைகறையும்
நெய்தல்	12 மாதங்களும்	காலை மாலையும்

இது மட்டுமல்லாமல் இந்த நிலங்களுக்குத் தக்கவாறு கருப்பொருள்களும் இலக்கியத்தில் பார்க்கப்படுகின்றன.

குறிஞ்சிக் கருப்பொருள்:
தெய்வம்: சேயோன் (முருகன்)
மேலோர்: வெற்பன், வேம்பன், பொருப்பன், கொடிச்சி
கீழோர்; வேட்டுவர், இறவுளர், கானவர், வேட்டுவித்தியர், குன்றுவர், குன்றுவித்தியர், குறத்தியர்.
நீர்: அருவி, சுனை.
பூ: சுனைக்குவளை, குறிஞ்சி, காந்தன், வேங்கை
ஊர்: குறிச்சி
விலங்கு: கரடி, யானை, புலி.
பறவை: கிளி, மயில்
இசை: குறிஞ்சிப் பண்
கருவி: குறிஞ்சியாழ்
பறை: முருகியம், தொண்டகப் பறை
மரம்: மூங்கில், அசோகு, தேக்கு, நாகம், சந்தனம், அகில்
தொழில்: மலைநெல் விதைத்தல், தேன் எடுத்தல், கிழங்கு கிண்டுதல், நீராடல், வெறியாடல், தினைகாத்தல்
உணவு: தினை, மூங்கில் அரிசி, மலைநெல்.

பாலைக் கருப்பொருள்
தெய்வம்: கொற்றவை
மேலோர்: எயிற்றியவர், விடலை, காலை, மீளி.
கீழோர் : எயினர், மறவர், மறத்தியர், எயிற்றியர்
நீர்: நீரில்லா சுனை, நீரில்லாக் கிணறு
பூ: பாதிரி, மராஅம்பூ, குராஅம்பூ
ஊர்:: பறந்தலை
விலங்கு: வலியறிந்த யானையும் புலியும் செந்நாயும்
பறவை: கழுகு, புரு, பருந்து
இசை: பஞ்சுரம்
கருவி: பாலையாழ்
பறை: துடி
மரம்: பாலை, இருப்பை, உழிஞை, ஓமை
தொழில்: பகற்சூறை, போர் செய்தல்
உணவு: கவர்ந்த பொருள்.

முல்லைக் கருப்பொருள்
தெய்வம்: மாயோன்.
மேலோர்: அண்ணல், தோன்றல், கிழத்தி, குறும்பொறை நாடன்
கீழோர்: ஆயர், ஆய்ச்சியர், இடையர், இடைச்சியர்
நீர்: கான்யாற்று நீர்
பூ: பிடலம்பூ, தோன்றிப்பூ, குல்லைப்பூ, முல்லைப்பூ
ஊர்: பாடி, சேரி, பள்ளி
விலங்கு: உழை, புல்வாய், முயல்
பறவை: சிவல், காட்டுக்கோழி
இசை: சாதாரி
கருவி: முல்லையாழ்
பறை: ஏறுகோட் பறை
மரம்: கொன்றை, குருந்தம், காயா
தொழில்: குரவையாடல், கொல்லேறு தழுவல், பயிரிடல், குழலூதல், கடாவிடுதல், மேய்த்தல்
உணவு: சாமை, வரகு, முதிரை

மருதக் கருப்பொருள்
தெய்வம்: இந்திரன்
மேலோர்: மனையோன், மகிழ்நன், கிழத்தி, ஊரன்
கீழோர்: மளமர், உழவர், உழத்தியர், கடையர், கடைசியர்
நீர்: கிணறு, ஆறு
பூ: கழுநீர், தாமரை
ஊர்: மூதூர், பேரூர்
விலங்கு: எருமை, நீர்நாய்
பறவை: தாரா, நீர்க்கோழி, நாரை, குருகு, அன்னம், வண்டானம், மகன்றில், கம்புள்
இசை: மருதப்பண்
கருவி: மருத யாழ்
பறை: மணமுழவு, நெல்லரிகிணை
மரம்: வஞ்சி, காஞ்சி, மருதம்
தொழில்: விழா எடுத்தல், நெல்லரித்தல், கடாவிடுதல், புது நீராடல், குளம் தொட்டல்
உணவு: செந்நெல்லரிசி, வெண்ணெல் லரிசி

நெய்தற் கருப்பொருள்
தெய்வம்: வருணன்
மேலோர்: கொண்கன், துறைவன், மெல்லம்புலம்பன், பரத்தி, நுழைச்சி, சேர்ப்பன், புலம்பன்
கீழோர்: திமிலர், நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர்
நீர்: மணர்கிணறு, உவர்க்கேணி, கவர் நீர்
பூ: நெய்தல், கைதை. தாழம்பூ, அடம்பம்பூ, முண்டகப்பூ
ஊ: பாக்கம், பட்டினம்.
விலங்கு : சுறா
பறவை : அன்னம், அன்றில், கடற்காகம்
இசை : செவ்வழிப்பண்

கருவி : விளரி யாழ்
பறை : நாவாய்ப்பம்பை, மீன்கோட்பறை
மரம் : கண்டர், ஞாழல், புன்னை
தொழில் : மீன் உணக்கல் பறவையோட்டல், உப்பெடுத்தல், விற்றல், மீன் பிடித்தல், கடலாடல்.

கருப்பொருளுக்குப் பின்வரும் உரிப்பொருளும் மேலே கூறிய நிலமைக்கேற்ப பிரிக்கப்பட்டுள்ளன.

குறிஞ்சி : புணர்தல், புணர்தல் நிமித்தம்
பாலை : பிரிதல், பிரிதல் நிமித்தம்
முல்லை : இருத்தல், இருத்தல் நிமித்தப்
மருதம் . ஊடல், ஊடல் நிமித்தம்
நெய்தல் : இரங்கல், இரங்கல் நிமித்தம்

மேலே கூறிய நிலங்களைப் பற்றி எழுதும போது திணைப்பொருள்கள் மாருது கூறவேண்டும் என்பது கட்டளை. திணைமயக்கம்' என்ற தொல்காப்பிய அதிகாரம் இதுபற்றி விரிவாகக் கூறும்.

நிலம்பூற்றி கூறும்போறு மேலே கூறிய மரபு பிறழாமல் கூறவேண்டும் என்பது விதி. பாலை நிலத்தில் தாமரைத்தடாகத்தை வர்ணிப்பது மரபல்ல. 'இது மரபல்ல' என்பது தெரிய வேண்டுவது அவ்வளவு அவசிமல்ல. மாலை நிலத்தில் தாமரைக் குள வர்ணனை தவறு என்பது நம் அனுபவ அறிவே உணர்த்திவிடும் (குறியீட்டு முறையில் வருவது வேறு) மரபு பற்றி விளக்கம் தேவைப்படாது. ஆயினும் மரபு வகுக்கப்பட்டதன் நோக்கம், இலக்கியம் சிறக்க வேண்டும் என்பதாகத்தான் இருந்திருக்கும். இலக்கியம் சிறக்கத்தான் மரபு என்ருல் பழைய மரபே போதுமா, அல்லது இன்றைய வாழ்க்கைச் சூழ்நிலையில் அதை மாற்ற புதிய மரபுகளைத் தோற்றுவித்துக் கொள்ளலாமோ என்பதை வாசகர்களே சிந்தித்துப் பார்க்க விட்டுவிடுகிறேன்.

'மரபை ஏற்படுத்த உதவியதாகக் கூறப்பட்ட பழக்க வழக்கங்கள்; கொள்கைகள் யாவும் வழகொழிந்து போனபிறகே நாம் இவற்றை விடப்பிடியாக உணர ஆரம்பிக்கிரேம்'' என்று டி. எஸ் எலியட் கூறுகிரார். ''சரத்ருதுவில் மரங்களிலிருந்து இலைகள் உதிரும்போதுதான் இலைகள் தனியாக முக்யத்வமற்று உதிரும் போதுதான் நாம் இலைகளைப் பற்றி உணர்கிரேம். இந்த உதிர்ந்த இலைகளைப் பொறுக்கி ஒன்று திரட்டி மீண்டும் கிளைகளில் ஒட்ட வைக்க நாம் செய்யும் ஸாத்தியக் காரத்தன்மாக காரியத்தில் நம் சக்தி விரயமாகலாம். ஆனுல், உயிரூட்டமுள்ள மரம் புது இலைகளைப் புதுப்பித்துக் கொள்ளும், காய்ந்த மரம் விரகாகவேண்டியதே.'' என்று மேலும் அவர் கூறுவார். உயிரூட்டம் நீங்கிப்போன பழைய கொகைகளையே விடப்பிடியாக 'மரபு' என்ற பேரில் பிடித்துக் கொண்டுருப்பதில் உள்ள அபாயத்தை அவரே மேலும் விளக்குகிருர்;

''முக்யத்வமானது எது, முக்யத்வமற்று எது என்று உணர்வதிலே குழப்பம்—உண்மை எது மனக்கற்பிதமெது என்பதிலே குழப்பம் மேலும் மாறக்கூடிய மரபை, மாருத, நகராத ஒன்ருக்கி விடக்கூடியஅபாயம்-எல்லாமே உள்ளன. மரபு என்பது, எல்லாவித மாற்றங்களுக்கும் ஒரு விரோதி என்ற எண்ணத்தை தோற்றுவித்து விடும்'' என்று அவர் கூறுகிருர்.

எதுமாதிரியான மரபு இருக்கவேண்டும் என்று அவர் கூறுவதையும் நாம் சிந்திக்க வேண்டும் ஒரு சிறந்த, உயிரூட்டமுள்ள, வாழும் மரபிலும் சிலகெட்ட கொள்கைகள், சில நல்ல கொள்கைகள் கலந்திருக்காலம் மேலும் மரபு என்பது உணர்ச்சிபூர்வமானது மட்டுமல்ல. சில பிடிவாதமான கொள்கைகளிலே நம்மை ஆழப் புதைத்துக் கொள்வதும் பாதுகாப்பாயிராது. ஏனெனில், ஒரு காலத்தில் சிறந்த கொள்கையாக இருந்த ஒன்று பிறிதொரு காலத்தில் அழிவுக்கு ஆக்கமளிப்பதாக இருக்காலம்...நாம் செய்யவேண்டுவது நம்முடைய சிந்தனையை உபயோகிப்பதே. தெளிவும் அறிவார்த்தமுமற்ற மரபு ஏற்றுக் கொள்ளப்படாததொன்று. கடந்தகால நிகழ்ச்சிகளில், சம்பவங்களில் பாதுகாக்கத் தககன யாவை, கைவிடப்பட வேண்டுவன யாவை என்று பகுத்துணர்ந்து செயல்பட வேண்டும். நம் விருப்பப்படி நம் சமூகங்களை வளம்பெறச் செய்ய என்னென்னன் நிலைகள், தேவைகள் கட்டுப்பாடுகள் நம் சக்திக்குட்பட்டதாக இருக்கின்றனவோ அவற்றைக் கொண்டு செயல்பட வேண்டும்.'' இதுமாதிரியான பலவற்றையும் சிந்தித்து அதன்மூலம் காலத்திற்கேற்ப மரபு அமைய வேண்டும் என்பது டி. எஸ். எலியட்டின் கருத்தாக உள்ளது.

(தொடரும்)

வெள்ளை

சிறுகதைகள்

சி. சு. செல்லப்பா

ரூ. 3/-

எழுத்து பிரசுரம்

19-A, பிள்ளையார் கோயில் தெரு சென்னை-5

ஆகாசப் பேணி ஒரு கதை

-ஹரி. சீனிவாசன்

மூக்கில் மண்பொடியின் நெடிபடர
முதுகில்
வெயிற் சவுக்கு வீசி
ஈரத்தை இறக்க முதுகுமண்
புழுவாய்
நெளிந்துருள
அஞ்சுதலை நாகக்காலை
கெஞ்சும் சேற்றில் கதித்து
உயிர் போமுன் உடலோடு
இருப்பதற்குக்
காளிய நர்த்தன மாடும் போது,

பல் சக்ர வ்யூகத்துள்
கரும் புகையின் கணைக்கூட்டுள்
கடலிரைச்சல் கோஷ நடுவில்
ட்ரெஸ்ஸர் கனைக்க
கட்டர் உறும
மிக்ஸர் அலற
க்ரஷ்ஷர் கர்ஜிக்க
எஃகுக் கால் ராக்ஷஸர்கள்
கண்சிமிட்டி எக்களித்து
நெருப்பைக் கொப்புளித்து
உமிழ
அபிமன்யுக்கள் ஜாடராக்னிக்கு
ஜீவிதத்தை ஹவிஸாக்சி
உதரமேத யாகம் செய்து
உயிர்போற்ற உடலிழக்கும்
போது,

வந்தாளொருவன்
தந்திநத்தோம் ததிகிணதோம்
தகஜணுத தாளத்தோடு
வெண்கலக் கிண்கிணி கணீரென்று
காலித் தட்டு கையிலிருத்தித் தலைமேலுயர்த்திக்
கதை பாஅடியது.

ஆகாசப்பேணி வேணுமா
ஆகாசப் பேணி
அமிர்தத்தில் வார்த்தெடுத்த
ஆகாசப்பேணி
இமையவரும் இமையாது எதிர்நோக்கியிருக்கும்
கச்சணியாக் கொங்கை மாதர்
அரம்பை முதல் அப்சரஸ்கள்
கை கொண்டு செய்வித்த ஆகாசப்பேணி
கண்ணுக்குக் காணாது
கை கொண்டு படாதேனும்
ஓட்டை மணி பர்ஸாய்க்
காலியான காய்ந்த வயிற்றையும்
கணத்தில் நிரப்பிவிடும்

நடமாடும் கால்களுக்கு
நல்ல சதங் கையாகும்
உடல் வளர்க்கும் உயிர் வளர்க்கும்
காசுக்கு ரெண்டு
ஆசைக்கு ஒண்ணு
ஆகாசப் பேணி.

குப்பன் கைப்பிடித்துக்
குப்பிச்சி வந்தாள்
குஞ்சு குளுவானையும் கூட்டிக்கொண்டு வந்தாள்

மாடன் கைப்பிடித்து
மாடத்தி வந்தாள்
மச்சான் குழந்தையையும் மேய்த்துக்கட்டி வந்தாள்

ஐயன் கைப்பிடித்து
அம்மாமி வந்தாள்
அத்திம்பேர் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு வந்தாள்

சோசேப்புக் கைப்பிடித்து
சூசையம்மாள் வந்தாள்
ஆசையோடு எட்டுப்பேரை இட்டுக்கொண்டு வந்தாள்

அன்வார் கைப்பிடித்து
அமீதா வந்தாள்
அண்டை வீட்டு ஆட்களையும் கூடக்கொண்டுவந்தாள்

உரியும் கையின் முன்தோலை
சரியும் பின்னம்புறமதனில்
சரசர வென்று தேய்த்து வந்தார்.

மூக்கின் நெடியுலற
முதுகுத் துளியின் சுமையிறக்க
முட்டி நெருக்கும் கொலையரக்கர்
சுட்டுப் பட்ட மரமாக
அமிர்தத்தில் குழைத்து
வான் மகளிர் தாம் செய்த
ஆகாசப் பேணியை
மூணு நாலஞ்சாய்
ஆவலோடு வாங்கியுண்ண
யாகம் தவிர்த்து
கால் தரையில் பாவாது
தலை கழுத்தில் நில்லாது
அடி சறுக்க முடிச்சவிழ்த்து
ஓடி வந்தார்.

அங்கே ஒருவன்
தன்னந்
தனியன்
பனங்காட்டு நடுநின்ற
ஒற்றைத் தென்னை
பழுப்புநரிக் கூட்டத்தில்
இருந்த ஒரு
பச்சை நரி
ஸ்வரத்தின் நடுவெழுந்த
ஸ்ருதிபேத நாதக் கறைப் புதுமை
மின்னி அலை தவிக்கும்
தண்ணீர்த் தடாகத்தில்
தெறித்திட்ட எண்ணெய்த்
துளி

வருபவர் நோக்கி
இரு மென இறைந்தான்

வானத்துப் பேணி
வையத்துக் காகாது
குடிமோசம் போகாதீர்
எனக்
கூக்குரலு மிட்டான்

வாழ்வை உழுது
வேர்வை விதைத்து
சுகத்தைக் களைந்து
கால் தரையில் வேர்விடக்
காவலுமிருந்து
வளர்த்த உதிரத்தில் உதித்திட்ட
உயர்வை.

எஃகு பித்தளை அலுமினிய
எந்திரத் துராக்கதரை
புகை நெருப்புப் பேய்களை
ஈடு கொடுத்து
கஃகு கஃகென்று

கபம் சோரக் காலூன்றி
உதரத் தீக்கு
நாளை நெய்யாக்கி
நாளும் யாகத்தவம் செய்து
முறுக்கேற முறிந்துவிடும்
முதுகெலும்புத் தண்டிலே
முளைத்தெழுந்த முனைப்பை,

தொந்தநநா பாட்டுக்கு
காலித்தட்டில்
இல்லாத பேணிக்கு
ஆகாசதேசத்து அரம்பையர் கைச்சரக்கென்று
ஆசையுற்று விற்று
அழிந்து போஓ
காஆஆ
தீஈஈ

என இரைந்தான்
விரைந்துவரும் கூட்டத்தின்

முன்னின்று இரைந்தான்.
பஸ் வந்தது
தவளை நசுங்கிப் போச்சு
மழை வந்தது
இளம் விதையழுகிப் போச்சு
காடெரிந்தது
காக்கைக் குஞ்சழிஞ்சு போச்சு
கரை புரண்டது
குடிசை கரைஞ்சு போச்சு

ஆகாசப் பேணி வாங்க
அவசரமாய் அவசரமாய்
விரைபவர்க்கு
இரைபவர் ஆர் படுவார்
கண்ணில்?
திமுதிமெனத் திரண்டவர்கள்
வழிமறித்து இரைந்தவனைத் தடுத்தவனை

தள்ளித்
துவைத்துத்
தரையில் தேய்த்து விட்டார்
அவன் கறையே மிச்சம்
வான்பேணி வாங்குவதை
தான் தடுக்க வந்தவனும்
தரைக் கறையாய் அறைந்து போக-

பேணி கிட்டாதது முண்மை
ஆனாலும்
பின்ருல்தானு பேணி
கொன்றது?
இல்லாத பேணி
இருந்தவனே, இரைந்தவனைப்
புல்லாகப் புழுதியாய்த்
தேய்த்துப் போக்கினது?—

மனக்குறளி பொடி மணலாய்
கண்ணுக்குள் நெருடுகிறது
மணல் நெருட
முத்து முத்தாய்ச் சுரக்கிறது
ரத்த பீஜன் ரத்த பீஜன்
என்று
நித்தம் தோலை உரிக்கிறது
இது என்ன தொல்லை?
வேறே நல்ல கதை இல்லை?

தொற்று நோய்

பூ. மாணிக்கவாசகம்

காதற் புதருக்குள்
கால்வைத்த சுருக்கில்
உணர்ச்சித் தேள்
உள்ளத்தைக் கொட்ட
கண்களிலே நெறிகட்டி,
திக்கெல்லாம் தேடியலைந்து
முக்கிமுனங்கி
கரிவேல முள்குத்தி
கண்மாய்க் கரம்பை நிறக் கூந்தல்
கழுத்தை வளைக்க,
கமலை இரைப்பவன் சிரிக்கிருன்.
வெள்ளைச் சீனிக்கிழங்குப் பற்கள்;
அட, இதையும் பார்த்து விட்டானு?
பணமயிலைகளின் எக்காளச் செண்டிப்பு.
கமலைவண்டி இரைகிறது.
இளமையின் முகத்தில்
கிழடு தட்டுகிறது;
முக்கால்கள்.
முக்காலன்.
முக்காடு அழகாயத்தான் இருக்கிறது.

தமிழ் எழுத்தாளரின் மொழி மகாநாடு

சு. சங்கரசுப்ரமண்யன்

டிசம்பர் மாதம் சென்னையில் நடந்த பதினைந்தவாது தமிழ் எழுத்தாளர் மாநாடு முந்தைய மாநாடுகளை விடச் சில அம்சங்களில் தனித்து விளங்கியதை உணர முடிந்தது. அலங்கார மண்டபம், அறுசுவை விருந்து, ஆரம்பதினத்தன்று கேடயங்களும் பதக்கங்களும் வழங்குதல் போன்றவை பழகிப்போன சங்கதிகள் என்றாலும், நிகழ்ச்சிகளின் ஒலி புதிய பொருளைப் பறைசாற்றியதைப் புரிந்து கொண்டவர்கள் பயன் பெற முடியும்.

துவக்கவுரை நிகழ்த்திய சி சுப்ரமண்யம் மாநாட்டை மட்டும் துவக்கி வைக்காமல் மொழிப் பிரச்னையையும் சேர்த்துத் துவக்கி வைத்தார் என்று சொல்லலாம். தமிழகத்தின் பழைய கல்வி அமைச்சர் என்ற முறையில் தமிழ் மொழியின் இன்றைய பயன் குறித்து அவருக்குச் சில தெளிவான கருத்துக்கள் உண்டு. பயிற்சிமொழி பற்றிய விவகாரம் ஒருபுறம் இருக்க, 'வேற்று மொழிச் சொற்களைத் தடுத்தால்தான் தமிழ் வளரும் என்பது தவறான கருத்து' என்று தன்னுடைய 'தாழ்மையான எண்ண'த்தைத் தெளிவாகவே வெளிப்படுத்தினார். பெரியசாமித் தூரன் சொன்னதாக அவர் கொடுத்த உதாரணம் சிந்தனைக்குரியது. ரயில்வே ஸ்டேஷன், ஏர் போர்ட். பஸ் ஸ்டாண்ட் என்று ஆங்கிலத்தில் தனித்தனி குறியீட்டு வார்த்தைகள் இருக்க தமிழில் 'நிலையம்' 'அகம்' என்ற இரு சொற்களையே எல்லாவற்றிற்கும் மாற்றி மாற்றி உபயோகிப்பது நிலை. ரயிலும் விமானமும், பஸ்ஸும் நமக்கு 'அன்னியம்' என்பதை நினைத்தால் நாம் அனாவசியமாக சங்கடப்படத் தேவையில்லை அவ்வாறே, சலூன், லாண்ட்ரி லைப்ரரி என்பதற்கு முடி திருத்தும் நிலையம், சலவை நிலையம், நூல் நிலையம் என்று நீட்டுகிறோம். வெட்டும் தொழிலும் வெளுக்கும் தொழிலும் இங்கு உண்டு; அதனால் 'நாவிதன்' 'வண்ணான்' என்ற உபயோகமும் இருந்தது. காலமாறுதலில் சலூனும் லாண்ட்ரியும் தோன்றும்போது நாம் சுற்றி வளைத்துச் சிரமப்படுகிறோம் என்றால், மொழியைக் கையாளும் லாவகம் பழக்கத்தால் செம்மைப்பட வேண்டும், அல்லது சலூனையும் லாண்ட்ரியையும் நாம் அங்கீகரிக்க வேண்டும்.

ஏ. ராமசாமி முதலியாரின் கூற்று ஒன்றையும் சுப்ரமண்யம் மேற்கோள் காட்டினார். ஆங்கில அகராதியில் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இரண்டு லட்சம் சொற்கள் இருந்ததாகவும் தற்போதைய எண்ணிக்கை ஆறு லட்சம் என்பதும் தகவல். ஆங்கில மொழியின் வளத்துக்குச் சான்றாக இது சுட்டிக் காட்டப்பட்டது. மறுநாள் காலை பேசிய நா. பார்த்தசாரதி இதைக் குறித்து, அகராதிச் சொற்களைப் பார்த்து எழுத்தாளன் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்க முடியாது என்றார். 'வெறும் அறிவுச் சேர்க்கை வேதாந்தமாகாது; அகராதி இலக்கணமாகாது' என்கிற கார்டினல் நியூமன் கூற்றும் என் நினைவுக்கு வந்தது. என்றாலும் அகராதிச் சொற்களின் பெருக்கம் உணர்த்துகிற உண்மையை நாம் புறக்கணிக்க முடியாது. அகராதியிலிருந்து எழுத்தாளன் பொறுக்காவிட்டாலும் எழுத்தாளன் உருவாக்கிய பக்கங்களிலிருந்து புதிய பதங்கள் அகராதியை நிரப்புகின்றன. எழுத்தாளன் கை வண்ணத்தால் மொழி வீச்சு சிறப்புப் பெறுகிறது. சுதந்திரமான சிந்தனை மொழி வளத்துக்கு நிச்சயமாக உதவும், மொழிக் கட்டுப்பாட்டில் இயங்கினால் கற்பனை சிதறுவது மட்டுமல்ல, பழைய அகராதிக்குள் புகுந்து புதிய சிந்தனையைச் சொல்ல மாட்டாமல் தவிக்க வேண்டியதுதான்.

கேடயம், பதக்கம் பெற்றவர்களைப் பாராட்டி அ. கி. பரந்தாமனாரும், கா. அப்பத்துரையும் பேசினார்கள். கேடயம் வழங்கும் விஷயத்தில் பழமையையும் புதுமையையும் சமமாகக் கௌரவிக்கும் நோக்கத்துடன் ஔவை துரைசாமிப் பிள்ளையையும் ப. கோதண்டராமனையும் 'தேர்ந்தெடுத்த எழுத்தாளர் சங்கத்தார் பாராட்டுரை வழங்கும் வாய்ப்பையும் ஒரு புதுமையாளருக்கு அளித்திருக்கலாம்.

பரந்தாமனார் உரை கேடயப் பெற்றவரைப் பாராட்டுவதை விட, கேடயம் பெறாத ஆயிரக்கணக்கான எழுத்தாளர்களுக்கு உபதேசமாகவே அமைந்தது. 'நல்ல தமிழ்' எழுத வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியதோடு எழுத்தாளர்களின் 'அறியாமை'க்காக அங்கலாய்த்தார் அவர். 'பிழை' இன்றி எழுத வேண்டும் என்று, எழுத்தார்களின் 'பிழைப்பைக் கெடுக்கும்' யோசனையையும் வெளியிட்டார். மாதிரிக்கு அவர் பார்த்தசாரதியைக் குறிப்பிட்டு வியந்தார். மறு நாள் காலை அவர் பார்த்தசாரதியின் பேச்சைக் கேட்டு மேலும் வியந்திருப்பார். தான் பாராட்டிய 'பண்டிதர்' (பார்த்தசாரதி மன்னிப்பாராக) தன் கருத்துக்கெதிராக அத்துணை தீவிரமாக போர்க் கோலம் பூணுவார் என்று அவர் எதிர்பார்த்திருக்க நியாயமில்லை.

அப்பாத்துரை எதிர்பாராத விதமாக எழுத்தாளர்களுக்கு மொழிச் சுதந்திரம் வழங்கி விட்டார். 'எந்த மொழியில் வேண்டுமானாலும் சொல்லுங்கள், சொல்வதை நயமாகச் சொல்லுங்கள், என்றாரே பார்க்கவில்லை! பன்மொழிப் புலவர் அல்லவா? தான் தூயதமிழ் ஆதாவாளர் என்றாலும் தன்னுடைய எழுத்தின் சிறப்புக்குக் காரண தூயதமிழ் அல்ல, தன் கைவண்ணம்தான் என்றபோது எழுத்தாளர்கள் கைதட்டியதில் வியப்பில்லை.

ஔவையார் கூட (துரைசாமிப் பிள்ளை தான்) இது விஷயத்தில் நிதானமான போக்கு உடையவராகவே காணப்பட்டார். கஷ்டப் பட்டு ஆராய்ச்சி செய்து, நீண்ட உழைப்புக்குப் பின் மேல்நாட்டில் புதிதாக ஒருவர் கண்டுபிடித்த பொருளைத் தமிழ்ப்படுத்துவது அர்த்தமற்றது மட்டுமல்ல, நன்றிகெட்டதனம்கூட என்று ஓங்கிப்போட்டார் அவர்.

ஆனால் இந்தச் 'சலுகை'களைக்கூட ஏற்கத் தயாராயில்லை நா. பார்த்தசாரதி. மறு நாள் காலை இவை பற்றிக் குறிப்பிட்டு 'பிழைத்துப் போ' என்கிற ரீதியில் எழுத்தாளர்களுக்கு விட்டுக் கொடுக்கும் இவர்கள் யார்' என்று கேட்டு விட்டார் அவர். 'பேனா மன்னன்' எந்தவிதத் தயவுக்கும் ஏங்காதது நியாயம்தானே?

மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் மூன்று கூறுகளாக அமைந்தன. கருத்தரங்கு, அனுபவக் கோவை, பட்டி மன்றம் என்றவாறு எழுத்தாளர்கள் முழுமையாகத் திட்டமிட்டுப் பங்கேற்றது, பாராட்டத்தக்க அம்சம். எழுத்தாளர் சங்கம் ஆண்டு பூராவும் அமைதியாகக் கிடந்ததையும், முந்தைய ஆண்டுகளில் நடந்த சிறுகதை, நாவல் விழாக்களைத் தொடர்ந்து வேறு இலக்கிய விழா நடைபெறுமற் போனதையும் மாநாட்டு நிகழ்ச்சிகள் ஓரளவு ஈடு செய்ததாகச் சொல்லலாம்.

''கதை இலக்கியத்தின் உறுப்புக்கள்'' என்னும் கருத்தரங்கில், கருப்பொருள், உருவம் பாத்திரப் படைப்பு, நடை, சூழ்நிலை, அமைப்பு என்றும் தலைப்புக்களில் முறையே எழில் முதல்வன், நா. பார்த்தசாரதி, சி. பாலசுப்ரமண்யன்; ரா. தண்டாயுதம், சி. சு. செல்லப்பா ஆகியோர் உரையாற்றினர். தலைமை வகித்த சுகி சுப்ரமண்யன் திட்டமாக இலக்கிய அம்சங்கள் பற்றி ஏதும் கூறாமல், இடையிடையே என்னமோ சொல்லிச் சமாளித்தார் என்று தான் சொல்ல வேண்டும். கருத்தரங்கை விவாத அரங்காக மாற்றிச் சூடாக்குவதே அவருடைய நோக்கமாக இருந்தது ஆனால் சூடு கதை இலக்கியம் சம்பந்தமாக இல்லாமல், முதல் நாள் துவக்கி வைக்கப்பட்ட 'சொல் தூய்மை' வியவகாரத்தைச் சுற்றிப் பிறந்தது. பார்த்தசாரதி பேச்சில் தலைப்பை விட்டு அவர் நகர்ந்தாலும் படைப்பாளியின் தவிப்பைப் பிரதிபலித்தது அவருடைய அழுத்தமான பேச்சு. எழில்முதல்வன் கொடுத்த உதாரணங்களால் கதைக்கான கரு எங்கெங்கோ ஒளிந்திருக்கும் என்பதை அறிய முடிந்தது. ஆனால் பாலசுப்ரமண்யன் அறிமுகப்படுத்திய பாத்திரங்கள் தமிழ் இலக்கியத்தைத் தவறாகப் புரிந்து கொள்ளவே உதவும். தண்டாயுதத்தின் தயாரிக்கப்பட்ட பேச்சில் கட்டுக் கோப்பான விளக்கம் தென்பட்டதைக் குறிப்பிடலாம். நடை பற்றி அவர் கொடுத்த பல் வேறு உதாரணங்களில் புதுமைப்பித்தனுக்கு அமைந்ததைப் போல வ. ரா. போன்ற வேறு சிலருக்கும் எடுப்பான பகுதிகளைத் தேர்ந்தெடுக்கலாம். கதையில் பகைப்புலம், சூழ் நிலை இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை நுணுக்கமாக விளக்க முற்பட்ட செல்லப்பா இன்னும் உதாரணங்கள் மூலம் தெளிவாக்கியிருக்கலாம் நிமிஷக்கணக்கில் சிக்குண்ட அரங்கப் பேச்சுக்கு அது இயலுமா என்பதும் யோசனைக்குரியது.

''பிற நாடுகளில் எழுத்தும் எழுத்தாளரும்'' பற்றி ஏ. ஜி. வெங்கடாச்சாரி தலைமையில் கி. ராஜேந்திரன், மணியன், தி. ஜானகிராமன், கு. திரவியம், மலேயா வேலுச்சாமி ஈழத்து கணேசலிங்கன் ஆகியோர் தங்கள் அனுபவங்களை எடுத்துக் கூறினர். இவர்களில் யாரும் பிறமொழி எழுத்தாளர்களின் அகப் பிரச்னைகளைத் தொட்டுக் காட்டவில்லை. எழுத்தாளர்களைச் சந்திப்பதற்கென்று அவர்கள் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளாததை அவர்களே ஒப்புக்கொண்டனர். வெளிநாட்டுப் பத்திரிகை வளர்ச்சி, பத்திரிகையாளரின் பிரச்னைகள் இவைகளைப் பற்றி ஓரளவு அறிய அவர்கள் பேச்சு உதவியது, திரவியத்தின் ரஷ்ய அனுபவ உரையின் மூலம், அங்கு எழுத்தாளர்கள் பொதுவாகக் கௌரவிக்கப் படுவதைக் கேட்கும்போது, சினிமா நட்சத்திரங்களைச் சுற்றி நம்முடைய சமூக வாழ்வின் சுழற்சி பின்னிப் போயிருப்பதை நினைத்துக் கூசிக்கொள்ள வேண்டியதுதான்

மாலையில் நடந்த பட்டிமன்றம் மாநாட்டின் சிகர நிகழ்ச்சியாக இருந்ததில் வியப்பில்லை. தமிழிலே புதுமை இலக்கியம் வளர்ச்சியடைந்ததாக ஒரு கட்சியும், தேக்கமுற்றதாக மறு கட்சியும் வாதாடினர். சூடும் சுவையும் பட்டி மன்றம் காணாதது அல்ல. ஆனால், பட்டி மன்றத்தில் கூடுவோர்—விவாதிப்போர் ரசிப்போர் இருதரப்பினருமே—ஒரு அடிப்படை உண்மையை உணர்ந்துதான் இருக்கிறார்கள், நாய்வேடம் போட்டால் குலைத்துத்தீர வேண்டும் என்பதுதான் அது. ஏற்றுக்கொண்ட கட்சிக்கு அப்போதைக்கு நியாயம் செய்வது தான் அறம் கட்சியை விட்டு விட்டு இந்த அம்சத்தை வெளிப்படையாக எடுத்த எடுப்பிலேயே கு. அழிகிரிசாமி சற்று அதிகமாகவே வலியுறுத்தப் போய் அதுவே மறு தரப்புக்குச் சாதகமான சூழ்நிலையைத் தேடித் தந்தது. என்றாலும் முடிவுரையில் அவர் சமாளித்துக்

கொண்டதை வைத்துக்கொண்டு நடுவர் கி. வா. ஜகந்நாதனின் தீர்ப்பு 'வளர்ச்சி'க்கட்சியைத் தாங்கியது. அப்படியும் அந்தத் 'தீர்ப்பு' திட்டமாக ஒரு பக்கம் விழுந்ததா என்ருல், அதுதான் இல்லை. அங்கே தான் கி. வா. ஜ. வின் சாமர்த்தியம் தொக்கி நிற்கிறது. இப்படியும் அப்படியுமாக நயம்பட உரைக்கின்ற பான்மையை 'தேக்க'க்கட்சியைச் சேர்ந்த வசுமதி ராமசாமி கூட ஓரிடத்தில் குறிப்பிட்டு விட்டார்!

இரு தரப்பிலும் புதுமை இலக்கியம் பற்றிய கண்ணேட்டமே உருவாகவில்லை. அவர் எழுதவில்லையா, இவர் எழுதவில்லையா என்று கேட்பது வளர்ச்சியைக் காட்டுவதாகாது. அதேபோல, விமானியைப் பற்றியும், நெய்வேலியைப் பற்றியும் எழுதி விட்டால் புதுமை படைத்ததாக ஆகாது. தாத்தாவுக்கும் காதல் உண்டு, பேரனுக்கும் காதல் உண்டுதான். தாத்தா பஸ் ஸ்டாப்பில் காத்திருந்ததில்லை, பேரன் காத்திருக்கிருன் என்பதிலா புதுமை அடங்கியுள்ளது? அப்படியே இருந்தாலும் எல்லாக் கதைப் பேரர்களும் பஸ் ஸ்டாப்பே கதியாகக் கடக்க வேண்டுமா என்ன? இப்படி விவாதித்துக் கொண்டே போகலாம். விஷயத்தின் பிடிப்பு வேறு வகையில் பதிந்திருக்கிறது. வளமான கற்பனை, பார்வையில் புதுமை. உத்தி முறைகளில் வேறுபாடு, மரபு பற்றிய உணர்வு—இம்மாதிரி விரிந்து கிடக்கிறது புதுமை இலக்கியத் தேவை. விவாதத்தின் நடுவே பிரஸ்தாபிக்கப்பட்ட பழைய 'சுதேசமித்திரன்' தேக்க விவாதத்தை ஊன்றிப் படித்தவர்கள் இலக்கியக் களத்தின் அகல, ஆழக் கணக்கு களைப் புரிந்து கொண்டிருக்கமுடியும். 'வளர்ச்சி போதாது என்றுதான் தேக்கக் கட்சிக்காரர்கள் சொல்கிருர்கள்' என்ற பட்டி மன்றத்தில் நடுவராக அமருகிறவர் சொன்னுல் இது யாரைத் திருப்திப்படுத்த? எழுத்தாளர் மாநாட்டுக்குப் பட்டி மன்றம் புதிது என்பதால் இப்படி நேர்ந்ததோ என்னவோ.

மாநாட்டின் மொத்த நிகழ்ச்சிகளை அசைபோட்டுப் பார்த்தால் அதிர்ச்சி தரும் உண்மை ஒன்று புலப்படுகிறது. எழுத்தாளருக்குள் இரண்டு ஜாதி (சாதி) இருப்பது தவிர்க்க முடியாது போலும். பழைய இலக்கியம் கற்றவர்கள், புதுமைப் படைப்பாளர்கள் பலருக்கு பழைய இலக்கியப் பரிச்சயம் உண்டு. புதுமைப் பித்தனுடைய பழைய நூல் அறிவு மாநாட்டிலேயே பேசப்பட்டது. பார்த்தசாரதி போன்றவர்களோ கேட்கவே வேண்டாம். பின், பிரிவு எங்கே உருவாகிறது? மொழியின் புதுப் பரிமாணம் உணராத பழமை வாதிகள், எழுத்தின் வேகத்தில் மொழிக்கு வளம் சேர்க்கும் புதுமைவாதிகள் என்று பிரிப்பது சரியாக இருக்கும். இந்தப் பாகுபாட்டில்தான், துடிப்போடு இயங்கும் படைப்பாளிக்கும் புதுப் பிரச்னைகள் முளைக்கின்றன. திட்டமிட்ட தாக்குதலைச் சமாளித்து தன்னுடைய சுதந்திரத்தை நிலைநிறுத்த எத்தகைய 'அறைகூவலையும் அவன் ஏற்கும்திறன் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகிறது. அந்தத்திறனை வெளிக்காட்டும் பக்குவம் முன்னெப்போதையும் விட இப்போது தெளிவாகத் தேவை. அவன் என்ன செய்யப் போகிருன் என்பதிலேயே இலக்கியத்தின் மட்டுமல்ல, மொழியின் எதிர்காலமே அடங்கி இருக்கிறது.

•

அறிஞர் ஆந்தை

வல்லிக்கண்ணன்

(ஆங்கிலப் பழம் பாடல் ஒன்றின் கருத்து கடன் வாங்கப்பட்டுள்ளது)

ஆந்தை ஒன்று
மரத்தில் இருந்தது.
அறிஞர் ஆந்தை
அதிகம் பார்த்தது.
பார்க்கப் பார்க்க
கூச்சல் குறைத்தது.
கூச்சல் குறையவும்
கூரிய காதால்
அதிகம் கேட்டது.
அதனுல் பின்னர்
உண்மை தெரிந்து,
தன்னை அறிந்து,
உலகை உணர்ந்தது.
பேச்சை வளர்க்கும்
பெரியவர் பலரும்
ஆந்தையைப் போல
ஆழ்ந்து அடங்கிடில்
அமைதி வளரும்
உலகம் உய்யுமே!

கனவும் நினைவும்

நட. சிதம்பரசுப்ரமண்யன்

யோகவாசிஷ்ட ராமாயணத்தில் இந்தச் சுவையான கதை வருகிறது.

உத்தரபாண்டவ தேசத்திலே, லவணன் என்ற பராக்ரமசாலியான அரசன் ஒருவன் இருந்தான். ஒருநாள் அவையில் மந்திரி பிரதானிகளுடன் வீற்றிருக்கும்பொழுது ஒரு மந்திரவாதி வந்து அடிபணிந்து "அரசே, சில வேடிக்கைகள் காட்டுகிறேன் அதைப் பார்த்து அநுபவிக்க வேண்டும்" என்று அரசனைக் கேட்டுக்கொண்டு, தன் மயில் இறகை வீசினான். பல அரிய வஸ்துக்கள் தோன்றின. பின்னர் மறைந்தன காண்பதற் கரியதான பல நிகழ்ச்சிகளைக் கண்கூடாக நிகழ்த்திக் காட்டினான்.

மந்திரவாதி ஜாலங்கள் செய்துகொண் டிருக்கும்பொழுதே, ஒரு குதிரைக்காரன்வந்து அடிபணிந்து சொன்னான். "அரசே, இந்தக் குதிரையைப் பாருங்கள் உச்சைச்ரவஸைப் போன்றது. இது வாயு பகவான் அம்சமாக பிறந்தது. என் எஜமானர் உங்களுக்கு இதை காணிக்கையாக அனுப்பியிருக்கிறார்'' என் றான். அப்பொழுது மந்திரவாதி "அரசே, கொஞ்சம் இதில் ஏறி சவாரி செய்துபாருங்கள்'' என்று சொல்லுகையில், அரசன் குதிரையையே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் கண்கள் இரண்டும் குதிரையின் மேல் பதிந்திருந்தன. ஆடாமல் அசையாமல், நிலைகுத்தியது போல வெறித்துப் பார்ப்பதை சிலர் அரசன் மிகவும் கூர்ந்து கவனிப்பதாக நினைத்தனர். ஆனால் மந்திரிகளில் ஒருவர் சந்தேகப்பட்டுச் கவலை கொண்டார். அப்பொழுது அரசன் தடா ரென்று சிம்மாசனத்திலிருந்து விழப் போனான். உடனே இரண்டு பேர்கள் விழாமல் பிடித்துக் கொண்டனர். அரசன் மெல்லிய குரலில் நடுங்கியவனாய் 'நான் எங்கி ருக்கிறேன். இதென்ன கூட்டம்'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

"அரசே, என்ன ஆச்சர்யம். அறிவும் விவேகமும், நிறைந்த தங்கள் மனம் ஏன் இப்படி ஒரு கலக்கத்தை அடைந்திருக்கிறது?'' என்று அரசனுக்கு உபசாரம் செய்யும்பொழுது அரசனுக்கு மயக்கம் தெளிந்து சுய அறிவு வர ஆரம்பித்தது. எதிரே நின்ற மந்திரவாதி யைக் கண்டு வெகுண்டு "ஏ பாதகா! என்ன காரியம் செய்தாய்! நிம்மதியாக இருந்த என் மனத்தில் புயலடிக்கச் செய்து விட்டாயே'' என்று கோபித்து தன் அமைச்சர்களைப்பார்த்து சொன்னான், "சபையோர்களே இவன்சொன்ன படியே நான் குதிரையில் ஏறிச் கொண்ட வுடன், அந்தச் குதிரை காற்றைப் போல பறந்து வெகுதூரம் சென்று விட்டது. மாலைப் பொழுது வந்தது. குதிரைக்குக் களைப்பு வந்துவிட்டது. அது அப்பொழுது போய்ச் கொண்டிருந்த பிரதேசம், வறண்ட, காய்ந்த பிரதேசம். அங்கும் குடிக்கத் தண்ணீர்கூடக் கிடையாது. நானும் குதிரையும், நாவறண்டு போனாலும், மேலும் மேலும் போய்க்கொண்டி ருந்தோம். ஒரு எலுமிச்சைத் தோட்டத்தின் வழியாகப் போய்க்கொண்டிருந்தோம். ஒரு மரத்தடியில் இறங்கி நான் உட்கார்ந்ததும், குதிரை எங்கோ மாயமாய் மறைந்து போனது. இதற்குள் நன்றாக இருட்டிவிட்டபடியால் அப்படியே படுத்துக்கொண்டேன். பகல் பிறந் ததும் பசி என் வயிற்றைப் பிடுங்கியது. நான் பசியால் துடிதுடித்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு பெண் சோற்று மூட்டையுடன் என் பக்கம் வருவதைக் கண்டேன். நான் அவளிடம் எனக்கு உணவு தருமாறு கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். அவள் என்னைப் பொருட்படுத்தாமலேயே போய்க் கொண்டி ருந்தாள். அவளைப் பின்தொடர்ந்து கேட்டுக் கொண்டே போனேன். அவள் சொன்னாள்; அரசே, நான் சண்டாளப் பெண் எனக்கு ஒரு நன்மை இருந்தால் ஒழிய நான் உங்க ளுக்கு உதவப் போவதில்லை என் தகப்பனு ருக்கு உணவு கொண்டு போகிறேன். ஆனால் என்னை மணந்தீர்களானால், இதில் பாதி சாப்பாடு உங்களுக்கு தருவேன்'' என்றாள். வேறு வழியின்றி சம்மதித்தேன். நான் அவளை மணந்து குடித்தனம் செய்தேன். இரு பெண்களும் ஒரு மகனும் எங்களுக்குப் பிறந் தார்கள். நாட்கள் ஆயின. அவர்களுடன், வறுமையிலும், துக்கத்திலும் கஷ்டத்துடனும் வாழ்க்கையைத் தள்ளி வந்தேன். இதன் நடுவிலே ஒரு கொடிய பஞ்சம் வந்தது. என் மாமனார் மாமியாரை விட்டுவிட்டு, என் மனைவி குழந்தைகளுடன் வேறு இடத்திற்குப் பிழைக் கும் வழி தேடிப் புறப்பட்டேன். வழியிலே எவ்வளவோ கஷ்டங்கள், குழந்தைகள் பசி யால் துடித்தன. அவர்கள் படும் துயரத்தைக் கண்டு மனம் தாளாமல், என் உயிரைவிடத் தீர்மானித்து, கட்டைகளை அடுக்கி நெருப்பு வைத்து அதில் இறங்கப்போனேன். அப் பொழுது என் சுய உணர்வு வந்துவிட்டது. நான் இங்கு இருப்பதை உணர்ந்தேன்'' என்று முடித்தான். அரசன் இதைச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே, மந்திரவாதி மாயமாய் மறைந்து போனான். இதை அறிந்த சபையிலிருந்த பெரியவர்கள் சொன்னார்கள். "அரசே, இவன் வெறும் செப்பிடு வித்தைக் காரன் அல்ல. ஈச்வரனே, உங்கள் மாயத் தோற்றத்தை தமக்கு அறிவுறுத்த வந்திருக்

கிறார் போலும் சம்சாரம், வாழ்க்கை, உலகம் இதெல்லாம் இதைப் போலத்தானே மனத்தின் பிரமையாக இருக்கிறது. வேறு ஒன்றும் இல்லையே. நம்முள் இருக்கும் சத்த சைதன்ய மானது, முதலில் ஒன்றாகிறது பிறகு பலவாகிறது அப்பொழுது நாமரூப பேதங்களை அடைகிறது. இந்த பேதங்களிலும் பல சுக துக்கங்களை அடைகிறது எது மெய் எது பொய் என்பதை உணர்வதற்குச் சக்தியில்லாமல் போய் விடுகிறது. மான் தன் கொம்பால் பிடிபடுகிறது. ஆசையில் மனம் பிடிபட்டுவிடுகிறது. மாயமாய் சிக்கிக் கொண்டு சஞ்சலத்தை அடைகிறது. எப்பொழுது இந்த சித்த விருத்திகளிலிருந்து விடுபடுகிறதோ, அப்பொழுதே, அதற்கு விமோசனம் ஏற்படுகிறது சம்சார சாகரத்தில் விழுபவன், ஆசையென்னும் முதலை வாயிலிருந்து தப்பி விவேகத்தை அடைந்த மனம் என்ற தோணிடன் நான் தப்ப வேண்டும். ஏனென்றால், இருப்பது இல்லாமல் இருப்பது என்ற இரு நிலைகளுக்கும் சைதன்யம், வௌகீக வாழ்க்கை என்ற இரண்டு நிலைகளுக்கும் நடுவிலே யிருக்கும் சந்திப்பு இடமாக இருப்பதுதான் மனம்'' என்று விளக்கினார்கள்.

மகத்தான தத்துவத்தை விளக்குவதா யிருந்தாலும் கதை இத்துடன் முடியவில்லை.

மறுநாள் லவணன் தன் பரிவாரங்களுடன் தன் சொப்பனம் சென்றவழியே போனான். சொப்பனத்திலே கண்டகாட்சி ஒன்று விடாமல் கண்டான். அதே வறண்ட காடு அதே எலுமிச்சைத் தோட்டம், அவற்றையெல்லாம் கடந்து அவன் சண்டாளனாக வாழ்ந்த குட்டி கிராமத்திற்கு வந்தான். கிராமமும் அவன் சொப்பனத்திலே கண்டபடியே இருந்தது. சில மனிதர்களை அரசன் அடையாளம் கண்டு கொண்டான். அவனுக்கு நன்கு பரிச்சயமானவர்கள் தான் அவர்கள். ஒரு கிழவி விம்மி அழுது கொண்டிருந்தாள்.'' ஏன் அம்மா, இப்படி வருத்தப்படுகிறாய்'' என்று அரசன் கேட்க ''அரசே, எனக்குப் பெண் ஒருத்தி இருந்தாள். அவளை வழி தவறிப் போய் வந்த அரசர் ஒருவர் மணந்து கொண்டார். அவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தனர். ஒரு சமயம் அங்கு கொடிய பஞ்சம் வந்தது. இங்கு வாழ முடியாமல் அவர்கள் என்னை விட்டுப் பிரிந்து போய் விட்டார்கள். அங்கேயும் பசிக் கொடுமையால் இறந்து விட்டதாக அறிகிறேன், நான் மாத்திரம் உயிருடன் இருந்து கொண்டு இந்தக் கஷ்டங்களைப் பார்த்துக் கொண்டு உயிருடன் இருக்கிறேன்.'' என்று கதறினாள். தன் மாமியார்தான் என்று அறிந்த அரசன், அவளுக்கு வேண்டிய சௌகரியங்களும் வசதிகளும் செய்துவிட்டு ஆறுதல் வார்த்தைகளும் சொல்லிவிட்டு தன் அரண்மனைக்குத் திரும்பினான்.

பெரியவர்களைப் பார்த்துக் கேட்டான். ''பெரியவர்களே, எப்படி சுவப்னத்தில் கண்டது வாழ்க்கையில் உண்மை அனுபவமாக ஆகிறது'' என்றான். அந்த அவையிலேயிருந்த வசிஷ்டர் சொன்னார் ''மனத்திற்கு இரண்டு ஸ்தானங்கள் உண்டு. ஒன்று ஞானபூமி. மற்றொன்று அஞ்ஞானபூமி. இரண்டிற்கும் ஏழு படிகள் உண்டு. நம்முடைய சைதன்யத்தை அஞ்ஞானம் மூடுகிறபொழுது, ஏழு நிலைகள் ஏற்படுகின்றன அவைகள் (1) மஹா ஜாக்ரதை (வித்து விழிப்பு நிலை) (2) ஜாக்கிரதை (விழிப்பு) (3) மகத் ஜாக்ரதை (ஆதி விழிப்பு) (4) ஜாக்ரத ஸ்வப்பன (விழிப்புக் கனவு) (5) ச்வப்னம் (கனவு) (6) ச்வப்ன ஜாக்ரதை கனவு விழிப்பு நிலை (7) அஷுப்தி (தூக்கம்)

சைதன்யம் மறையுடன் கலந்து நிற்கும் முதல் நிலை வித்து விழிப்பு நிலை. வித்து வளர்ந்து மலர்ந்து அது நான்தான் என்று சொல்வது விழிப்பு நிலை. இந்த நிலையை உணர்ந்து தீர்மானிக்கும் நிலை அதிவிழிப்பு நிலை, அடுத்தது விழிப்பும் கனவும் கலந்தநிலை. பின்னர் கனவு நிலை. இந்தக் கனவிலே மனம் லயிப்பதினாலே அடுத்த நிலை கனவு விழிப்பு நிலை கடைசியாக உள்ளது தூக்க நிலை. இந்த நிலையில் சைதன்ய ஜீவன் தான் இந்த சரீரத்துடனும் வாழ்க்கையுடனும் சேர்ந்திருக்கும் நிலைமையை மறந்து நிற்கும் உயரிய நிலை. மனிதனுடைய ஆசாபாசங்கள் சூக்ஷ்மமாக இந்த நிலையிலே சைதன்யத்துடன் கலந்து நிற்கின்றன. அவைகள் சில சமயங்களில் அனுபவங்களாகவும் நமக்கு ஏற்படுகின்றன.

இந்த நிகழ்ச்சி பல காரணங்களினால் ஏற்பட்டிருக்கலாம் ஏதோ ஒரு காலத்தில் லவணன் என்று யாரோ ஒரு அரசனுக்கு அந்த கிராமத்து அனுபவம் ஏற்பட்டிருக்கக் கூடும். தற்கால, லவணனுககு அந்தப் பழய நிகழ்ச்சி மானஸிகமான ஒரு அனுபவமாக ஏற்பட்டிருக்கும். சில சமயங்களில் பழைய நிகழ்ச்சி ஒரு கனவாக வருவதும் உண்டு அந்த கிராமத்திலே நடந்தது, ஒரு தோற்றமாக லவணன் மனத்தில் தோன்றியிருக்கலாம். மாந்திரிகன் முன் அனுபவித்த லவணனின் மானஸிக அனுபவம், கிராமத்து மக்களின் மனத்திலே பிரதிபலிக்கப்பட்ட அனுபவமாகவும் இருக்கலாம். சைதன்யமான ஆத்மாவே, மனத்திற்கு உள்ளேயும் ,புறத்திலும் நாம் அடையும் அனுபவங்களுக்கு ஆதாரமாயிருக்கிறது. நம்முடைய சைதன்யமே, ஸத்தாகவும் அஸத்தாகவும் தோற்றமளிக்கிறது. கடலும், அலையும், மரமும் வித்தும், வெவ்வேறாகத் தோன்றினாலும், உண்மையில் வேறுபட்டவை அல்ல ஆகவே. மனத்தை அது போகும் வழியில் போய் விடாமல் அடக்கி உண்மைப் பொருளைநோக்கிச் செலுத்த வேண்டும்'' என்று விளக்கம் கொடுத்தார்கள்.

(அடுத்த ஏட்டில் முடியும்)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லா யோசனைகளுமே தமிழுக்கு விலங்கிடும் செய்கைகள். அவை எல்லாத்தையும் விட இது ரொம்ப மேற்போனது. இந்த இருப தாம் நூற்றாண்டின் தலைசிறந்த விமரிசகர்க ளில், கவிகளில் ஒருவரும் கவிதைத்துறையில் புதிய இயக்கம் உருவாக்கியவருமான எஸ்ரா பவுண்ட்'தான் சொந்தமாக ஒரு கவிதை கூட எழுதி இருக்காத ஒருவன் உனக்கு படைப்பு சம்பந்தமாக புத்திமதியோ யோசனையோ சொன்னால் அதை காதிலே போட்டுக்காதே' என்று சொன்னார். இதையே நமது படைப்பாளி களுக்கு இந்தபோராசிரியகளின் உபதேசம்பற்றி சொல்லவேண்டிய சமயம் வந்து விட்டது.

பொதுவாக இந்த பேராசிரியர்கள் புலவர் கள் தமிழ் ஆசிரியர்களுக்கும் (விதி விலக்காக ஒரு சிலர் உண்டு) படைப்புக்கும் சம்பந்தமே இல்லை. இவர்கள் பட்டங்கள் பெற்று இருப்பது இலக்கிய மூலத்தையும் உரையையும் படித்து இலக்கிய மாணவர்களுக்கு இலக்கியத்தை அறி முகப்படுத்தத் தான். இந்த இலக்கியங்களை ரசித்த மாணவன் அவனுக்குள்ளே படைப்பு உணர்வு ஏற்படக் கூடுமானால், அவன் தானும் படைப்பாளியாக மாறுவான் தன் வழியில் கற் பனையை செலுத்தி. கம்பனையோ, இளங்கோ வையோ பின்பற்றி இருக்கவேண்டும் என்ப தில்லை. விருத்தத்திலோ வெண்பாவிலோ தான் பாடவேண்டும் என்பதும் இல்லை. எந்த சொல்லை எந்த இடத்தில் போட வேண்டும் என்பதும் அவனுக்கு தெரியும். கம்பனும் இளங்கோவும் பாரதியும் எந்த பேராசிரியர் புல வரைக் கேட்டு படைக்கவில்லை, சமைத்ததை சாப்பிட்டுருசிபார்க்கவேண்டியதைவிட்டுவிட்டு சமையலறைக்குச் சென்றுசமையல்காரனை இப் படிக் கிளறு அப்படிச்செய் என்கிற வேலைதான் இந்த புலவர், போராசிரியர்கள் செய்வது. நாவ லையும் சிறு கதையையும் நல்ல தமிழில் எழுத வேண்டுமாம். ஆமாம், நல்ல தமிழில் தான் எழுதவேண்டும். நாமும் அதைத்தான் சொல் கிறோம். ஆனால் எது நல்லதமிழ், எந்த இலக் கியப் பிரிவுக்கு ஏற்ற தமிழ், எந்தக்காலத்துக்கு ஏற்ற தமிழ், எந்த நிலைக்குத் தக்க இயல்புத் தமிழ், எந்த சந்தர்ப்பத்துக்கு பொருத்தமான தமிழ் என்பதை பார்க்கவேண்டும் இந்த போரா சிரியபுலவர்கள். சங்கத்தமிழ்என்ன, பாரதியின் தமிழ் கூட இன்றய நாவல் சிறுகதை படைப் பாளிக்கு போதாது. படைப்பாளிக்குஉரை நடை (புரோஸ்) மட்டும் போதாது. நடை (ஸ்டைல்) வேண்டும். இந்த 'ஸ்டைல்' என்பது எழுவாய் பயனிலை, செயப்படு பொருள் வாக்கியம் இல்லை. அனுபவத்தை உணர்வை அழகை அறிவை கற்பனையை தன் குரலாக ஒலிக்கச் செய்கிற வெளியீட்டுக்கான ஒரு சாதனம்.

இந்த சாதனம் அவனவன் கையில் மேலே சொன்ன அம்சங்களுக்குத் தக்கபடி வளைந்து கொடுத்து விதவித சொல் சேர்க்கைகளால் பலவித வாக்ய வார்ப்புகளாகும். அது தான் நடை ரகங்கள் என்பது. இது தமிழ் பேராசிரி யர்களுக்கு இன்னும் தெரியவில்லை போலிருக் கிறது. படைப்பாளிகள்தான் இனி அவர்களுக் குத் தெரியச்செய்யவேண்டும். பேராசிரியர்களு க்கு ஒரே வித வாக்ய அமைப்பு உரை நடை தான் தெரியும். அதை வைத்துத் தான் எல் லாத்தையும் எடை போடுவார்கள். நல்ல தமிழ்என்பது பாரதி, வ. வே. சு. பாரதிதாசன் வ. ரா. சங்கு'சுப்ரமண்யன் டி. எஸ். சொக்க லிங்கம், புதுமைப்பித்தன், கல்கி மரபில் வளர் வது தான். இவர்கள் தான் இன்றய படைப்பா ளிக்கு வழிவகுத்தவர்கள். அந்தவழி வந்தவர் கள் எழுதியவை தான் நல்ல தமிழ் பாடபுத்த கம் எழுதி வரும் மரபுவழி வந்தவர்கள் தமிழ் இல்லை அது. படைப்புத் தமிழ் வேறு பண்டி தத் தமிழ் வேறு, 1930க்களில் புதுப் படைப்பு கள் பிறக்க படைப்புத்தமிழ் வளர்ந்தது. உரை நடை வளம் பெருகியது நயமான நடை விதங் கள் தோன்றின. அது இலக்கிய வளர்ச்சியை யும் உரை நடை வளர்ச்சியையும் குறித்தது.

முப்பதாண்டுக்காலம் அந்த வளர்ச்சி நீடி த்து வந்தது. இந்த அறுபதுக்களில்இப்போது இந்தப் புலவர் பேராசிரியர் தமிழாசிரியர்களின் கட்டுப்பெட்டி மனப்பான்மை தலையெடுத்து இருக்கிறது உலக இலக்கியசரித்திரத்தை புரட் டிப்பார்த்தால் இந்த மடிசஞ்சி சுபாவம் நீடித்த தில்லை, வெற்றி பெற்றதும் இல்லை என்பது தெரியும். படைப்பு சம்பந்தமாக இப்படி யெல் லாம் மனப்பான்மை கொள்வதுக்காக அவர் களை கண்டிக்கலாம், புத்திசொல்லலாம் எச்சரிக் கலாம். ஆனால் அதைவிட படைப்பாளிகளுக்கு சொல்லவேண்டியது தான் தேவையான காரி யம் எனவே முன்குறிப்பிட்ட எஸ்ரா பவுண் டின் வரிகளை நினைவூட்டி இந்த தூய தமிழ், நல்ல தமிழ், மாற்று மொழிச்சொல் என்ற பேராசிரிய புலவர் தமிழாசிரியர்களின் மூட நம்பிக்கை குரலை லட்சியம் செய்யாமல், ஏன் உதாசீனம் செய்து, தங்கள் கவனத்தை, தமிழ் இலக்கியமும் மொழியும் வளர தங்கள் பங்கை செலுத்துவதில் மனம் முனையவேண்டும் படைப்பாளிகள்.

தூ. எ. சங்க தலைவர்

சோ. சிவபாதசுந்தரம்

இந்த ஆண்டுக்கு தமிழ் எழுத்தாளர் சங்க தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டி ருக்கும் சோ. சிவபாதசுந்தரம் அவர்களை பாராட்டுகிறோம். அவர் காலத்திலாவது சங்கம் இலக்கியத்தரமாக செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

EZHUTHU Edited and Published by C. S. Chellappa from 19-A, Pillaiyar Koil Street Madras-5
Printed by M. Ramanatha Rao for ... Press, 97, Big Street, Triplicane, Madras-5

நாடக அரங்கம்

நாடக அரங்கம் என்றபெயர்கொண்ட இந்த அமைப்பு தமிழ்நாட்டில் நாடகத்துறையில் கலைத்தரமான, இலக்கியத்தரமான நாடகங்களை தயாரித்து அளிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நாடகங்களை தயாரிக்கும் குழுவாகவும், அதேசமயம் நாடகத்தை ரசிகர்கள் பார்க்க வகை செய்யும் சபாவாகவும் இரண்டு அம்சங்களில் நாடகஅரங்கம் செயல்படும்.

தமிழில் சுயமாக எழுதப்படும் உயர்தர நாடகங்களுக்கு முதல் இடம் தரும். அதோடு சிறந்த பிறமொழி நாடகங்களையும் மொழிபெயர்த்தும் தழுவியும் தயாரித்து அளிக்கும்.

வருகிற ஆறுமாத காலத்துக்குள் — அதாவது ஒரு சீசனுக்கு — மூன்று நாடக நிகழ்ச்சிகள் அளிக்கப்படும்.

முதல் நிகழ்ச்சி :

பதச்சோறு (பி. எஸ். ராமையா), பில்ஹணன் (ந. பிச்சமூர்த்தி), ஸார் நிச்சயமா நாளைக்கு (புதுமைப்பித்தன்), அந்தமான் கைதி (கு. ப. ராஜ கோபாலன்) ஆகிய 4 நாடகங்கள் கொண்டது. ஒரு நீண்ட நாடகமும் மூன்று ஓரங்க நாடகங்களும்.

இரண்டாவது :

முறைமைப்பெண் (சி. சு. செல்லப்பா), தோல்வி (ந. சிதம்பரசுப்ர மண்யன்) ஆகிய ஒரு நீண்ட நாடகமும் ஒரு ஓரங்க நாடகமும்.

மூன்றுவது :

ஹல்லோ யார் அங்கே (வில்லியம் ஸரோயன்), எழுத்தாளன் (டோரியா நிகோடமி) ஆகிய 2 நீண்ட மொழிபெயர்ப்பு, தழுவல் ஓரங்க நாடகங்கள்.

இந்த மூன்று நாடக நிகழ்ச்சிகளை தயாரிக்கும் பொறுப்பை ஏற்றிருப்பவர் இலக்கியம், சினிமா, நாடகம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் பி. எஸ். ராமையா.

கலை இலக்கியத்தரமான இந்த 'நாடக அரங்கம்' முயற்சி வெற்றிபெற இலக்கிய, நாடக ரசிக அன்பர்கள் இந்த முதல் சீசனுக்கு சந்தாதாராக சேர்ந்து ஆதரவு தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள்

சந்தா விகிதம்

முதல் வகுப்பு	ரூ.	10. 00	(ஒருவருக்கு)
,,	ரூ.	15. 00	(ஒரு சந்தாவில் இருவருக்கு)
இரண்டாம் வகுப்பு	ரூ.	5. 00	(ஒருவருக்கு)
மூன்றும் வகுப்பு	ரூ.	3. 00	,,

சி. சு. செல்லப்பா
(ஆர்கனைஸர்)

நாடக அரங்கம்
19-A, பிள்ளையார்கோயில்தெரு,
சென்னை-5.

EZHUTTHU Edited and Published by C.S. Chellappa from 19-A, Pillair Koil Street Madras-5
Printed by M. Ramanatha Rao for Central Press, 97, Big Street, Triplicane, Madras-5